அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம்: 26/97(1)

எனது இல:111/0266/2/68(எல்ஏ) vi(5)
அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07
1998. மார்ச்.....24..... ஆந் திகதி.

செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள்
யாவருக்கும்.

## கடன்களுக்கான வட்டி அறவிடல் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம்

ஆறு வகையான கடன்களுக்கான வட்டி விகிதத்தை 4.2% வரை குறைப்பதிற்கான தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3:8 ஆம் பிரிவில் திருத்தியபோது 97.11.19 ஆந் திகதியிட்டு வெளியிடப்பட்ட 26/97 ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையின் பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. நாட்டினுள் ஏற்படுகின்ற குழப்பங்களினால் அசையாச் சொத்துக்களுக்கு தீங்கு ஏற்படுகின்ற மற்றும்/அல்லது அசையும் சொத்துக்களை இழக்கின்ற அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள முற்பணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தாபன விதிக் கோவையில் XXIV ஆம் அத்தியாயத்திற்கு புதிதாக 14 ஆம் பிரிவை இணைத்து 1998.08.30 ஆந் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 29/88 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வட்டியானது 7.2% ஆக நிருணயிக்கப்பட்டுள்ளது. மேலே 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறுவகையிலான கடன்களுக்கு மேலதிகமாக 29/88 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்படுகின்ற முற்பணத்திற்காகவும் 1997.12.01 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய வருடாந்த வட்டி வீதம் 4.2 % ஆக இருக்க வேண்டுமென தற்போது அரசு தீர்மானித்துள்ளது.

03. தற்போதும் பெற்றுக் கொண்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட முற்பணத்தின் 1997.12.01 ஆந் திகதியில் எஞ்சியுள்ள நிலுவைக்காகவும் இந்தப் புதிய வட்டி விகிதம் செல்லுபடியாகும்.

04. இந்தச் சுற்றறிக்கையானது திறைசேரியின் அங்கீகாரத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/ டிக்ஸன் நிலவீர
பதில் கடமை புரியும் செயலாளர்.
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

ter/w/2